**சார்பு நீதிமன்றம், ஒட்டன்சத்திரம், திண்டுக்கல் மாவட்டம்.**
**முன்னிலை : திரு.C.ஜெயப்பிரகாஷ், M.Com., M.L.,**
**சார்பு நீதிபதி, ஒட்டன்சத்திரம்**
**2026–ஆம் ஆண்டு ஜுன் மாதம் 24ம் நாள் புதன்கிழமை**
**2057 திருவள்ளுவர் ஆண்டு பராபவ வருடம் ஆனி மாதம் 10ம் நாள்**
**அசல் வழக்கு எண்.206/2022**
**(பழனி சார்பு நீதிமன்ற அசல் வழக்கு எண்.49/2014)**
[CNR.No.TNDG190005242022]

1. சாந்தசீலா

2. செல்வி.கிருஷ்ணபிரியா

3. செல்வி.ஹேமதலா ... வாதிகள்

(2, 3 வாதிகள் இளவர்நிலை நீங்கி உரிமை வயதை அடைந்து விட்டதால் இ.ம.எண்.67/2025 என்ற எண்ணில் கடந்த 27.02.2025ம் தேதி பிறப்பிக்கப்பட்ட உத்தரவின்படி வழக்குரையில் திருத்தம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

/ எதிராக /

1. பொன்ராஜ்

2. சார்பதிவாளர் அவர்கள், சத்திரப்பட்டி சார்பதிவகம்

3. மாவட்ட ஆட்சி தலைவர் அவர்கள், திண்டுக்கல் ... பிரதிவாதிகள்

இந்த வழக்கானது கடந்த 07.02.2014ஆம் தேதி தாக்கல் செய்யப்பட்டு, அன்றே மாண்புமிகு பழனி சார்பு நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண்.49/2014 என்ற எண்ணில் கோப்பிற்கு எடுக்கப்பட்டு, பின்பு ஆள்வரை எல்லையின் காரணமாக மாண்புமிகு முதன்மை மாவட்ட நீதிபதி, திண்டுக்கல் அவர்களின் அ.எண்.137/21/ஏ1. தேதி 15.12.2021ம் தேதிய உத்தரவின்படி இந்நீதிமன்றத்திற்கு மாற்றம் செய்யப்பட்டு, இந்த நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண்.206/2022 என்ற எண்ணில் கோப்பிற்கு எடுக்கப்பட்டு, என் முன்னர் கடந்த 23.06.2026ஆம் தேதியன்று இறுதி விசாரணைக்காக வந்தபோது, வாதிகள் தரப்பில் வழக்குரைஞர் திரு.M.சையதுஇப்ராஹிம் அவர்கள் முன்னிலையாகியும், 1ம் பிரதிவாதி தரப்பில் வழக்குரைஞர் திரு.A.பூர்ணச்சந்திரன் அவர்கள் முன்னிலையாகியும், 2, 3 பிரதிவாதிகள் தரப்பில் அரசு கூடுதல் வழக்குரைஞர் அவர்கள் முன்னிலையாகியும், வழக்குரை, எதிர்வழக்குரை,

சாட்சியங்கள், சான்றாவணங்கள், வழக்குகோப்பு ஆகியவைகள் கவனமாக பரிசீலிக்கப்பட்டும், இருதரப்பு வழக்குரைஞர்களின் வாதுரைகள் கேட்கப்பட்டும், நாளதுவரை இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து வந்து இன்று இந்நீதிமன்றம் வழங்கும்,

**தீ ர் ப் பு ரை**

1. அசல் வழக்கானது தாவா சொத்துக்களை பொறுத்து பாகப்பிரிவினை பரிகாரம், நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் மற்றும் வழக்கின் செலவுத்தொகைக்கோரியும் வாதியால் இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. **வாதி தாக்கல் செய்த செய்த வழக்குரை சுருக்கம் :**

1ம் வாதியும், 1ம் பிரதிவாதியும் கணவன் மனைவி. 2, 3 வாதிகள் 1ம் வாதி மற்றும் 1ம் பிரதிவாதியின் மக்கள். தாவா சொத்துக்கள் 2,3 வாதிகளுக்கு பூர்வீக வழியில் பாத்தியப்பட்ட கூட்டு குடும்ப சொத்துக்களாகும். தாவா சொத்துக்களை பொருத்து 1ம் பிரதிவாதியும், அவரது தகப்பனார் கன்னியப்பன் என்பவரும் சகோதரி குங்குமம் என்பவரும் கூட்டாக அனுபவ சுவாதீனத்தில் வைத்து அனுபவித்து வந்துள்ளனர். சொத்துக்களை பொருத்து 1ம் வாதி அவரது நகைளை விற்று அதை அவரது கணவரான 1ம் பிரதிவாதியிடம் கொடுத்ததில் 1ம் பிரதிவாதி தொகையை பெற்று அதன் வழியாக 1ம் பிரதிவாதியின் தகப்பனார் கன்னியப்பனுக்கும், அவரது சகோதரியான குங்குமம் என்பவருக்கும் ரொக்கம் கொடுத்து சொத்துக்களை கன்னியப்பன், குங்குமம் ஆகியோரின் பங்கு பாத்தியத்தை கடந்த 24.09.2005ம் தேதி பதிவு செய்யப்பட்ட பாகபாத்திய விடுதலை பத்திரத்தின் வழியாக 1ம் பிரதிவாதியின் பெயருக்கு விடுதலை பத்திரம் வழியாக விடுதலை பெற்று சொத்துக்களை வாதிகளும், 1ம் பிரதிவாதியும் கூட்டாக அனுபவித்து வந்துள்ளனர். 1ம் பிரதிவாதிக்கும், 1ம் வாதிக்கும் கடந்த 15.09.1997 ம் தேதி திருமணம் நடைபெற்று, திருமணத்தின்போது 1ம் வாதிக்கு அவரது தந்தையர் வீட்டில் 25 பவுன் தங்க நகையும் பண்ட பாத்திரங்களும் சீர் வரிசைகள் கொடுத்துள்ளனர். திருமணத்தின் வழியாக 2, 3 வாதிகள் பிறக்கும் வரை இருவரும் ஒற்றுமையாக இருந்து தாவா 2 லக்க சொத்தாகிய பழனி தாலுக்கா, ஆயக்குடி கிராமம், பழைய ஆயக்குடி கிராமத்தில் 4வது வார்டில் குடியிருந்து வந்துள்ளனர். கடந்த 4, 5

ஆண்டுகளாக 1ம் பிரதிவாதி 1ம் வாதியின் பெற்றோர்கள் வீட்டில் இருந்து பணம் பெற்று ஆயக்குடி கிராமத்தில் சப்போட்டா பழ வியாபாரம் செய்து வந்துள்ளார். 1ம் பிரதிவாதி குடித்துவிட்டும், வேறு ஒரு பெண்ணுடன் தொடர்பு வைத்துக்கொண்டும், அவரது தூண்டுதல் பேரில் வாதிகளை அடித்து துன்புறுத்தியும் 1ம் பிரதிவாதி தொடர்பு வைத்துள்ள பெண்ணுடன் தங்கியும், தான்தோன்றிதனமாக வாழ்ந்து வந்து, வாதிகளை கவனிக்காமல் வேறு பெண்ணுடன் ஓடி விட்டார். 1ம் வாதி தனது குழந்தைகளான 2, 3 வாதிகளை வளர்த்தும், தாவா 2 லக்க சொத்தில் குடியிருந்தும், தாவா 1 லக்க சொத்தில் விவசாயம் செய்தும் அனுபவித்து வந்துள்ளார். தாவா சொத்துக்கள் அனைத்தும் வாதிகளுக்கும், 1ம் பிரதிவாதிக்கும் சேர்ந்த கூட்டுக் குடும்பத்திற்கு பாத்தியப்பட்ட சொத்துக்களாகும். தாவா சொத்துக்களை பொருத்து எந்த பாகப்பிரிவினையும் ஏற்படவில்லை. சொத்துக்களை வாதிகள் 1ம் பிரதிவாதியுடன் கூட்டாக அனுபவித்து வந்துள்ளனர். தாவா சொத்துக்களில் 2, 3 வாதிகளுக்கு 2/3 பாகமும், 1ம் பிரதிவாதிக்கு 1/3 பங்கு பாத்தியமும் உள்ளது. 1ம் பிரதிவாதி தாவா சொத்தில் வாதிகளின் பங்கு பாத்தியத்தையும், 1ம் வாதியின் ஜீவனாம்ச பாத்தியத்தையும் மோசடி செய்யும் பொருட்டு வேறு நபர்களுக்கு ஒத்தி, ஈடு, கிரையம் மற்றும் குத்தகை போன்ற வில்லங்கங்கள் செய்ய முயன்று வந்ததால், 1ம் வாதி 2ம் பிரதிவாதியின் அலுவலகத்தில் கடந்த 20.01.2014ம் தேதி ஆட்சேபனை மனு கொடுத்துள்ளார். அதற்கு 2ம் பிரதிவாதியின் அலுவலகத்தில் இருந்து கடந்த 22.01.2014ம் தேதி ஒரு பதில் அறிவிப்பு கொடுக்கப்பட்டுள்ளது. 1ம் வாதி 1ம் பிரதிவாதியின் சட்டவிரோத செயல் குறித்து பழனி அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் புகார் கொடுத்துள்ளார். எனவே, தாவா சொத்துக்களில் 2,3 வாதிகளுக்குரிய 2/3 பங்கு பாகத்தை பிரித்து தனித்த சுவாதீனம் கொடுக்க வேண்டியும், 1ம் பிரதிவாதி 2,3 வாதிகளின் பங்கு பாகத்தை பிரித்து தனித்த சுவாதீனம் கொடுக்கும் வரை 1ம் பிரதிவாதியோ அவரது வகை ஆட்களோ, ஏஜண்டுகளோ 2ம் பிரதிவாதியின் அலுவலகத்தின் வழியாக தாவா சொத்துக்களை வேறு நபர்களுக்கு ஒத்தி, ஈடு,கிரையம் போன்ற வில்லங்கங்கள் செய்யக்கூடாது என்று நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் வேண்டியும் வாதிகளால் இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**3. 1ம் பிரதிவாதி தாக்கல் செய்த எதிர்வழக்குரை சுருக்கம்:**

வாதியின் வழக்கு சட்டப்படி, நியாப்படியும் நிலைநிற்கத்தக்கதல்ல. வழக்குரையில் இந்த பிரதிவாதியால் ஒப்புக்கொள்ளப்படும் சங்கதிகளை தவிர மற்ற அனைத்து சங்கதிகளும் மறுக்கப்பட்டுள்ளது. தாவா சொத்துக்களில் 1–லக்க சொத்தானது 1–ம் பிரதிவாதிக்கு மட்டும் தனித்து பாத்தியப்பட்டதாகும். தாவா 1–லக்க சொத்துக்கள் முழுவதும் ஆதியில் 1–ம் பிரதிவாதியின் தகப்பனாரை பெற்ற தாத்தா பெருமாள் குடும்பன் என்பவருக்கு பாத்தியப்பட்ட சொத்துக்களாகும். பெருமாள் குடும்பனுக்கு இரண்டு மகன்கள் உள்ளனர். இரண்டு மகன்களும் தாவா 1–லக்க சொத்தை இரண்டு சம பாகங்களாக பிரிவினை செய்து அனுபவித்து வந்துள்ளார்கள். தாவா 1–லக்க சொத்தில் சரிபாதி சொத்தினை 1–ம் பிரதிவாதியின் தகப்பனார் கன்னியப்பன் என்பவர் அவரது சகோதரர் முருகேசன் என்பவரிடமிருந்து கடந்த 10.09.2008–ம் தேதியில் ஆவண எண்.1372/2008–ன்படி பாக பாத்திய விடுதலைப் பத்திரம் வழியாக பெற்றுள்ளார். 1–லக்க சொத்துக்கள் முழுவதும் 1–ம் பிரதிவாதியின் தகப்பனார் கன்னியப்பன் என்பவருக்கு தனித்து பாத்தியப்பட்ட சொத்துக்களை 1–ம் பிரதிவாதி கடந்த 24–09–2008–ம் தேதியில் ஆவண எண் 1485/2008–ன் வாயிலாக பாகப் பாத்திய விடுதலைப் பத்திரம் வழியாக பெற்று தனது தனித்த சுவாதீனத்தில் வைத்து அனுபவித்து வந்துள்ளார். பாகப்பாத்திய விடுதலைப் பத்திரம் வழியாக தாவா 1லக்க சொத்துக்களை பெற்று அனுபவித்து வந்த 1–ம் பிரதிவாதி 1–லக்கச் சொத்தைக் கொண்டு வங்கியில் பயிர் கடன் பெற்றும், அடமான கடன் பெற்றும் விவசாய அபிவிருத்தி செய்து வந்துள்ளார். தாவா 1–லக்க சொத்துக்களில் 1–ம் பிரதிவாதி மட்டும் தனித்து அனுபவித்து வந்துள்ளார். அதில் வாதிகள் எந்த காலத்திலும் கூட்டாக அனுபவித்து வந்தது கிடையாது. தாவா 2–லக்க சொத்தானது 1–ம் பிரதிவாதியின் தந்தையை பெற்ற தாத்தாவான பெருமாள் குடும்பன் என்பவருக்கு பாத்தியப்பட்ட சொத்தாகும். பெருமாள் குடும்பனுக்கு கன்னியப்பன், முருகேசன் ஆகியோர்கள் வாரிசுகள். கன்னியப்பனுக்கு 1–ம் பிரதிவாதியான பொன்ராஜ் என்ற ஆண் மகனும், குங்குமம் என்ற பெண் வாரிசும் உள்ளார்கள். தாவா 2–லக்க சொத்தானது கன்னியப்பன் என்பவருக்கும், முருகேசன் என்பவருக்கும் சரி பாதி பாத்தியம் உள்ளதில், சரிபாதி பாத்தியத்தில் 1–ம் பிரதிவாதிக்கு 1/3 பாகம் கிடைக்கத்தக்கது. 1–ம் பிரதிவாதிக்கு

கிடைக்கக்கூடிய பாகத்தில்தான் வாதிகளுக்கு 2/3 பாக பாத்தியம் உள்ளது. வாதிகள் பாக உரிமை உள்ள நபர்களை இவ்வழக்கில் தரப்பினர்களாக சேர்க்காததால் அவசிய தரப்பினர்களை சேர்க்காத தோசத்திற்கு இவ்வழக்கு உள்ளாகிறது. வாதிக்கு திருமணத்தின் போது அணிவித்த நகைகளை 1ம் பிரதிவாதியிடம் காண்பிக்காததால், எத்தனை பவுன் நகை அணிவித்தார்கள் என்பது 1ம் பிரதிவாதிக்கு தெரியாது. விவசாய அபிவிருத்திக்காகவும், குழந்தைகளின் படிப்பு செலவுகளுக்காகவும் வங்கியில் கடன் பெறுமாறு வாதி, 1–ம் பிரதிவாதியிடம் 9 பவுன் நகைகளை கொடுத்து, கடன் பெற்று குழந்தைகள் படிப்பிற்கான செலவுகளும், விவசாய அபிவிருத்தி செலவுகளும் செய்யப்பட்டது. 1–ம் பிரதிவாதி பெற்றுள்ள கடன் தொடர்பாகவும் 1–லக்க சொத்துக்களை வாதி தனது பெயருக்கு எழுதிக்கொடுக்க வேண்டும் என நிர்பந்தம் செய்ததாலும் வாதிக்கும் 1–ம் பிரதிவாதிக்கும் அடிக்கடி சண்டை சச்சரவுகள் ஏற்பட்டுள்ளது. வங்கியில் நிலுவையில் உள்ள கடன் தொகைகளை தீர்ப்பதற்காக பணம் சம்பாதிக்கவே 1–ம் பிரதிவாதி கடந்த 2011–ம் ஆண்டில் கேரளாவிற்கு சென்றுவிட்டு வீடு திரும்புவதற்குள் வாதி பொய்யான சங்கதிகளை கொண்டு இவ்வழக்கினை தாக்கல் செய்துள்ளார். 1–ம் பிரதிவாதி கேரளாவிற்கு சென்ற சமயத்தில், தாவா 2–லக்க சொத்தில் வாதியை குடியிருக்க செய்து, வீட்டில் 1–ம் பிரதிவாதிக்கு சொந்தமான 3 பவுன் தங்க காசும், ரொக்கமான பணம் ரூபாய் 10,000/–ஐயும் வாதியிடம் கொடுத்து சென்றுள்ளார். தாவா 1–லக்க சொத்தை வாதியை பராமரித்து வருவதற்கும், அதில் வரும் வருமானத்தையும் எடுத்துக்கொள்ளும்படியும் வாதியிடம் சொல்லிவிட்டுதான் 1–ம் பிரதிவாதி கேரளாவிற்கு சென்றுள்ளார். கேரளாவிற்கு சென்ற 1–ம் பிரதிவாதி தனது தகப்பனாரிடம் சொத்துக்கள் பற்றி விசாரித்தபோது தாவா 1–லக்க சொத்துக்களை 1–ம் பிரதிவாதியின் அனுமதியில்மால் வேறு நபர்களுக்கு குத்தகைக்கு விட்டுள்ள விபரம் தெரிய வந்துள்ளது. தாவா 1–லக்க சொத்துக்களில் முறையான ஆவணங்கள் மூலம் பாகப் பாத்தியங்கள் ஏற்படுத்தப்பட்டு 1–ம் பிரதிவாதிக்கு தனித்து பாத்தியப்பட்டுள்ளது. தாவா 2–லக்க சொத்தில் நாளது தேதிவரை எவ்விதமான பாகப் பிரிவினையும் ஏற்படவில்லை. 1–ம் பிரதிவாதி நாளது தேதிவரை தாவா சொத்துக்களில் எவ்விதமான வில்லங்கங்களையும் ஏற்படுத்தவில்லை. நாளது தேதிவரை 1–ம் பிரதிவாதி எந்த பெண்ணிடமும் தகாத உறவுடன் வாழ்ந்து வரவில்லை. இவ்வழக்கில் அவசியமற்ற

தரப்பினர்களை வாதி சேர்த்துள்ளார். தாவா 2வது லக்க சொத்தை பொறுத்து அவசிய தரப்பினர்களை வழக்கில் சேர்க்கவில்லை. தாவா 1–லக்க சொத்தில் 1–ம் பிரதிவாதி வங்கியில் பெற்றுள்ள கடன் தொகையினை வசூல் செய்யும் பொருட்டு, பாரத ஸ்டேட் வங்கி, பழனி கிளையின் வழியாக இந்நீதிமன்றத்தில் O.S. No. 552 / 2015 என்ற வழக்கு தாக்கல் செய்யப்பட்டு, நாளது தேதிவரை நிலுவையில் இருந்து வருகிறது. வங்கியை இவ்வழக்கின் தரப்பினராக சேர்த்து மேல்நடத்த வேண்டியது அவசியமாகிறது. வாதிகளுக்கு எந்த பரிகாரமும் கிடைக்கத்தக்கதல்ல. எனவே வாதிகளின் வழக்கை 1ம் பிரதிவாதியின் செலவு தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டும் என எதிர்வழக்குரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**4. 2ம் பிரதிவாதியால் தாக்கல் செய்யப்பட்டு 3ம் பிரதிவாதியால் ஏற்றுக்கொள்ளப்பட்ட எதிர்வழக்குரை சுருக்கம் :**

1–ம் வாதி, 1–ம் பிரதிவாதியின் மனைவி என்றும் 2,3 வாதிகள் 1–ம் பிரதிவாதியின் மக்கள் என்பதும் வழக்கு சொத்துக்கள் 2,3 வாதிகளுக்கு பூர்வீக வழியில் பாத்தியப்பட்டு கூட்டு குடும்ப சொத்துக்கள் என்பதும் அவைகளை கூட்டாக அனுபவித்து வந்ததாகவும் கூறியிருப்பதும், சொத்துக்களில் வாதிகளுக்கு பாகம் உள்ளது என்பதும் 1ம் பிரதிவாதி வாதிகளுக்குரிய பாகத்தினை பிரிவினை செய்து கொடுக்காமல் காலம் கடத்தி வந்ததால் வாதிகளால் இந்த வழக்கு தொடரப்பட்டுள்ளது என்பது வாதிகள் மற்றும் 1–ம் பிரதிவாதி ஆகியோர்களுக்கு சம்மந்தப்பட்டவையாகும். மேற்கண்ட விபரங்களுக்கும், 2, 3 பிரதிவாதிகளுக்கும் எவ்வித சம்மந்தமும் கிடையாது. வழக்கு சொத்துக்களை பொறுத்து 10.09.2008–**ம்** தேதியில் கன்னியப்பன் அவர்களுக்கு கிருஷ்ணன் வகையறாக்கள் ஒரு பாக பாத்திய விடுதலை பத்திரம் எழுதி பதிவு செய்து கொடுத்துள்ளதாகவும் மற்றும் 24.09.2008ம் தேதியில் பொன்ராஜ் அவர்களுக்கு கன்னியப்பன் வகையறாக்களால் ஒரு பாக பாத்திய விடுதலை பத்திரம் எழுதி கொடுத்ததாகவும், பின்னிட்டு மேற்படி சொத்துக்களை பொன்ராஜ் என்பவர் 03.06.2009–ம் தேதியில் பழனி பாரத ஸ்டேட் வங்கியில் ஆவணங்களை ஒப்படைத்து கடன் பெற்றுள்ளது பத்திரப்பதிவு அலுவலக ஆவணங்களின் வழியாக தெரிய வருகிறது. மேலும் எந்த ஒரு தனி நபரும் முறையான ஆவணங்களை சார் பதிவு அலுவலத்தில் சமர்பித்து அதற்குரிய முத்திரை தாள்கள் மற்றும் பதிவு கட்டணம்

ஆகியவைகளை செலுத்தினால் அவற்றினை சரிபார்த்து பத்திரத்தினை பதிவு செய்வதற்கு சார் பதிவாளர் அவர்களுக்கு முழு அதிகாரம் உள்ளது. அதனை தடை செய்ய வாதிகளுக்கு எந்த உரிமையும் சட்டப்படி கிடையாது. வாதிகள் அரசுக்கு வரக்கூடிய வருவாயினை தவிர்க்க வேண்டுமென்ற தீய நோக்கத்துடனும் அரசுக்கு வீண் செலவுகளையும் சிரமங்களையும் ஏற்படுத்த வேண்டுமென்ற நோக்கத்துடன் வாதிகளால் இந்த வழக்கு தொடரப்பட்டுள்ளது. வாதிகளால் தொடரப்பட்டுள்ள வழக்கில் 2, 3 பிரதிவாதிகளை பொறுத்து யாதொரு வழக்குமூலமும் கிடையாது. மேலும், வழக்கிற்கு செலுத்தப்பட்டுள்ள நீதிமன்ற கட்டணமும் தவறானதாகும். எனவே, வாதிகளின் வழக்கை 2, 3 பிரதிவாதிகளின் செலவு தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டும் என எதிர்வழக்குரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**5. வழக்குரை, 2ம் பிரதிவாதியின் எதிர்வழக்குரை ஆகியவற்றை பரிசீலனை செய்து கடந்த 20.06.2016ம் தேதி எழுவினாக்கள் வனையப்பட்டு, பின்பு 1ம் பிரதிவாதியின் பெயரில் பிறப்பிக்கப்பட்ட ஒருதலைபட்ச உத்தரவை ரத்து செய்து, 1ம் பிரதிவாதியின் எதிர்வழக்குரை ஏற்றுக்கொள்ளப்பட்டு கடந்த 08.07.2020ம் தேதி கீழ்க்கண்ட எழுவினாக்கள் வனையப்பட்டுள்ளது.**

<u>எழுவினாக்கள் :</u>

1. தாவா 1வது இலக்க சொத்துக்கள் 1ம் பிரதிவாதிக்கு தனித்து பாத்தியமான சொத்தா?
2. தாவா சொத்துக்களில் 2, 3 வாதிகளுக்கு தலா 1/3 பாகம் கிடைக்கத்தக்கதா?
3. 2, 3 வாதிகளின் பாகத்தை பிரித்து கொடுக்கும் வரை 1ம் பிரதிவாதி தாவா சொத்துக்களை எவ்வித வில்லங்கத்திலும் ஈடுபடுத்தக்கூடாது என்ற நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் வாதிகளுக்கு கிடைக்கத்தக்கதா?
4. வாதிகளுக்கு கிடைக்கக்கூடிய வேறு பரிகாரம் என்ன?

**6.** வாதிகள் தரப்பில், 3ம் வாதி தன்னை வா.சா.1 ஆக விசாரித்து, வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.9 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்தும், அமுதா என்பவர் வா.சா.2 ஆக விசாரணை செய்து, சா.சா.ஆ.1 மற்றும் சா.சா.ஆ.2 ஆவணங்கள் குறியீடு செய்தும், பிரதிவாதிகள் தரப்பில், 1ம் பிரதிவாதி தன்னை பி.வா.சா.1 ஆக விசாரித்தும், கன்னியப்பன் என்பவர் பி.வா.சா.2 ஆக விசாரித்தும், பிரதிவாதிகள் தரப்பில்

சான்றாவணங்கள் எதுவும் முன்னிலைப்படுத்தாத நிலையில், பி.வா.சா.1 மற்றும் பி.வா.சா.2 ஆகியோர்களின் சாட்சியங்களுடன் வழக்கு விசாரணை முடிக்கப்பட்டுள்ளது.

**7.** 1ம் பிரதிவாதி தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரையில் தாவா 2வது இலக்க சொத்துக்களை பொறுத்து 1ம்பிரதிவாதியின் தகப்பனார் கன்னியப்பன் என்பவரின் உடன் பிறந்த சகோதர் முருகேசன் என்பவருக்கும் சரிபாதி பாத்தியம் உள்ளதாகவும், உரிய தரப்பினரான முருகேசன் என்பவரை இவ்வழக்கில் தரப்பினராக சேர்க்காத காரணத்தினால் வழக்கு பாதிக்கப்படுகிறது என்று எதிர்வழக்குரை தாக்கல் செய்துள்ள நிலையில், தரப்பினர்களை சேர்க்காதது குறித்து எழுவினாக்கள் வனையப்படாமல் விடுப்பட்டுள்ளது. மற்றும் தாவா சொத்துக்கள் பூர்வீக சொத்துக்களா அல்லது 1ம் பிரதிவாதியின் தகப்பனாருக்கு பாத்தியப்பட்ட தனிப்பட்ட சொத்துக்களா என்பது பற்றியும் எழுவினாக்கள் வனையப்படாமல் உள்ள நிலையில், உரிமையியல் விசாரணை நடைமுறைச்சட்டம் கட்டளை 14 விதி 5ன் நோக்கெல்லைக்குட்பட்டு, கீழ்கண்டவாறு எழுவினாக்கள் மாற்றம் செய்யப்பட்டு திருத்தி வனையப்படுகிறது.

**8. திருத்தி வனையப்பட்ட எழுவினாக்கள் நாள் : 23.06.2026**

1. தாவா 1வது இலக்க சொத்துக்கள் 1ம் பிரதிவாதியின் தகப்பனாருக்கு பாத்தியப்பட்ட பூர்வீக சொத்துக்கள் என்று வாதிகள் கூறியுள்ளது சரியா?
2. அசல் வழக்கானது உரிய தரப்பினர்களை சேர்க்காத காரணத்தினால் பாதிக்கப்படுகிறதா?
3. தாவா 1வது இலக்க சொத்துக்கள் 1ம் பிரதிவாதிக்கு தனித்துப்பாத்தியப்பட்ட சொத்து என்பது சரியா?
4. தாவா சொத்துக்களை பொறுத்து 2, 3 வாதிகளுக்கு தலா 1/3 பாகம் கிடைக்கத்தக்கதா?
5. வாதிகள் கோரியுள்ள நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் வாதிகளுக்கு கிடைக்கத்தக்கதா?
6. வாதிகளுக்கு கிடைக்கக்கூடிய இதர பரிகாரம் என்ன?

**9.** திருத்தி வனையப்பட்ட எழுவினாக்களை பொறுத்து போதுமான சாட்சியங்கள் இருதரப்பிலும் விசாரணை சமயத்தில் முன்னிலைப்படுத்தப்பட்டுள்ளதால், இரு தரப்பினர்களுக்கும் சாட்சிகளை மீண்டும் விசாரிக்கும் வாய்ப்பை தவிர்க்கப்பட்டு, மீண்டும் இரு தரப்பு வாதுரை கேட்கப்பட்டு, தீர்ப்புரை பகரப்படுகிறது.

**10. பிரச்சனைக்கான தீர்வுகள் : எழுவினாக்கள் 1 மற்றும் 3 எழுவினாக்களுக்கு ஒன்றாக விடை காண்பதே சரியானதாக இருக்கும் என்பதால் இரண்டு எழுவினாக்களுக்கும் ஒன்றாக விடைகாணப்படுகிறது.**

**1. எழுவினாக்கள் 1 மற்றும் 3க்கான தீர்வுகள் : தாவா 1 வது லக்க சொத்துக்கள் 1ம் பிரதிவாதியின் தகப்பனாருக்கு பாத்தியப்பட்ட பூர்வீக சொத்துக்கள் என்று வாதிகள் கூறியுள்ளது சரியா? மற்றும் தாவா 1வது இலக்க சொத்துக்கள் 1ம் பிரதிவாதிக்கு தனித்துப்பாத்தியப்பட்ட சொத்து என்பது சரியா?**

**1.1.** வாதி தாக்கல் செய்துள்ள வழக்குரை சங்கதிகளில், **" பிராது சொத்துக்கள் 2, 3 வாதிகளுக்கு பூர்வீக வழியில் பாத்தியப்பட்ட கூட்டுக்குடும்ப சொத்துக்கள் ஆகும். மேற்படி சொத்துக்களை பொறுத்து 1ம் பிரதிவாதியும் அவரது தகப்பனார் கன்னியப்பன் என்பவரும், சகோதரி குங்குமம் என்பவரும் கூட்டாக அனுபவித்தும், சுவாதீனத்திலும் இருந்து வந்தார்கள் "** என்று சொல்லியுள்ள நிலையில், தாவா சொத்துக்கள் பூர்வீக வழியில் பாத்தியப்பட்ட சொத்துக்கள் என்று வாதிகள் தரப்பில் வழக்கானது முன்னெடுத்துச்செல்லப்பட்டுள்ளது.

**1.2.** தாவா சொத்துக்கள் என்பது திண்டுக்கல் மாவட்டம், பழனி பதிவு மாவட்டம், ஒட்டன்சத்திரம் வட்டம், சிந்தலவானம்பட்டி கிராமம்,

(I). சர்வே எண்.288/4 பு.ஹெக்டேர் 0.43.0 ஏக்கர் 1 செண்ட் 06 இதில் <u>சரிபாதி தென்புறம்</u> (பட்டா எண்.548)

(ii) சர்வே எண்.288/5 பு.ஹெக்டேர் 0.18.5 ஏக்கர் 0 செண்ட் 46 (பட்டா எண்.547)

(iii) சர்வே எண்.288/6 பு. ஹெக்டேர் 0.85. ஏக்கர் 2 செண்ட் 10 (பட்டா எண்.238) ஆக மொத்தம் ஏக்கர் 3 செண்ட் 09 உள்ள விவசாய நிலமும் மற்றும் பழனி வட்டம், ஆயக்குடி கிராமம், ஊர்கட்டில் நத்தம் சர்வே எண்.166/585 பட்டா எண்.1015 விஸ்தீரணம் 0.77.5 உள்ள ஓட்டு கட்டிடமும் தாவா சொத்தாகும். தாவா சொத்துக்களை பொறுத்து வழக்குரையில் விவசாய நிலங்களை 1வது இலக்க சொத்தாகவும், நத்தம் ஊர்கட்டில் உள்ள இடத்தை 2வது இலக்க சொத்தாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

**1.3.** வாதிகள் தரப்பில் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ.1 ஆவணத்தை இந்நீதிமன்றம் பரிசீலனை செய்து பார்க்கும்போது, கடந்த 24.09.2008ம் தேதி 1ம் பிரதிவாதிக்கு அவரது தகப்பனார் கன்னியப்பன் என்பவரும், 1ம் பிரதிவாதியின் சகோதரி குங்குமம் என்பவரும் எழுதி வைத்த பாகப்பாத்திய விடுதலைப்பத்திரம் ஆகும். மேற்படி விடுதலைப்பத்திரத்திரமான வா.சா.ஆ.1 ஆவணத்தில், தாவா 1 லக்க சொத்துக்கள் மற்றும் அதன் சமஸ்த பாத்தியங்கள் முழுவதிலும் 2/3 பாகத்தை பொறுத்து விடுதலைப்பத்திரம் எழுதிக்கொடுக்கப்பட்டுள்ளது என்பதை அறிய முடிகிறது. எனவே, வா.சா.ஆ.1 ஆவணத்தின் தன்மைப்படி தாவா 1வது இலக்க சொத்து முழுவதும் 1ம் பிரதிவாதியை கடந்த 24.09.2008ம் தேதி வந்தடைந்துள்ளது.

**1.4.** வாதிகள் தரப்பில் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ.1 ஆவணமான பாகப்பாத்திய விடுதலைப்பத்திரத்தின் சரத்துக்களை இந்நீதிமன்றம் பரிசீலனை செய்து பார்க்கும்போது, வா.சா.ஆ.1 ஆவணத்தின் பக்கம் 2ல், **"நமக்கு பூர்வீக வழியில் பாத்தியப்பட்ட இதனடியில் கண்ட சொத்தில் சரிபாதி சொத்தையும், எங்களில் 1லக்க நபருக்கு சென்ற 10.09.2008ம் தேதிய சத்திரப்பட்டி சார்பதிவகம், 1372/2008ம் நம்பராக பதிவு செய்யப்பட்ட பாகப்பாத்திய விடுதலைப்பத்திரம் மூலம் பாத்தியப்பட்ட சரிபாதி சொத்தையும் சேர்த்து"** என்று சரத்துக்கள் உள்ள நிலையில், தாவா 1 லக்க சொத்தில் சரிபாதி பாத்தியம் பாகப்பாத்திய விடுதலைப்பத்திரத்தின் வழியாகவும், மீதமுள்ள பாதி பாகம் பூர்வீக வழியிலும் பாத்தியப்பட்டது என்பது மேற்படி சரத்துக்களில் இருந்து அறிய முடிகிறது.

**1.5.** பி.வா.சா.1 என்பவரை வாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை மேற்கொண்டபோது,"**தாவா சொத்தானது எனது தாத்தா பெருமாள் குடும்பன் என்பவருக்கு பாத்தியப்பட்ட பூர்வீக சொத்து என்றால் ? ஆமாம். எனது தாத்தாவிடம் இருந்து எனது சித்தப்பாவும், எனது தகப்பனாரும் பாகவிஸ்தி செய்து கொண்டார்கள். எனது சித்தப்பா பாகத்தை எனது தகப்பனார் கிரையத்திற்கு வாங்கினார். எனது சித்தப்பா பெயர் முருகேசன் என்றால் ? சரிதான்."** என்று சாட்சியம் முன்னிலைப்படுத்தியுள்ளார். இந்நிலையில், தாவா சொத்துக்கள் பூர்வீக சொத்துக்கள் என்றும் அதில் சரிபாதி சொத்தினை பாகப்பாத்திய விடுதலைப்பத்திரம் வழியாக பாத்தியப்பட்டுள்ளதாக

சொல்லியுள்ள நிலையில், கன்னியப்பன் என்பவருக்கு தாவா 1 லக்க சொத்தில் பாதி சொத்துக்கள் பாகப்பாத்திய விடுதலைப்பத்திரத்தின் வழியாக பாத்தியப்பட்ட சொத்துக்கள் என்பது மிகத்தெளிவாகிறது.

**1.6.** 1ம் பிரதிவாதி தரப்பில் முன்னிலைப்படுத்தியுள்ள 1ம் பிரதிவாதியின் தகப்பனாரான கன்னியப்பன் பி.வா.சா.2 என்பவர் இந்நீதிமன்ற முதன்மை சாட்சியத்தில்,"**பிராது 1 லக்க சொத்து ஆனது எனது தகப்பனார் பெருமாள் அவர்கள் கடந்த 16.04.1986ம் தேதி குப்புச்சாமி கவுண்டர் அவர்களிடம் இருந்து கிரையம் பெற்று எனது அப்பா அவரது கைவசம் வைத்து அனுபவித்து வந்தார். அவர் இறந்த பின்பு தாவா 1 லக்க சொத்தை நானும், எனது உடன் பிறந்த சகோதரருமான முருகேசனும் அடைந்துஅனுபவித்து வந்தோம். 1லக்க சொத்தினை கூட்டாக அனுபவித்து வருவதில் எங்களுக்குள் நடைமுறைச் சிக்கல்கள் இருப்பதை கருத்தில் கொண்டு நானும், எனது சகோதரரும் பேச்சு வார்த்தை நடத்தி எனது சகோதரர் 1/2 பங்கினை எனக்கு கிரையம் கொடுப்பதாக ஒப்புக்கொண்டு ரூபாய் 1,23,350/–க்கு கிரையம் பேசி கடந்த 10.09.2008ம் தேதியில் ஆவண எண்.1372 ஆக பதிவு செய்யப்பட்ட ஒரு பாகப்பாத்திய விடுதலைப்பத்திரத்தின் மூலமாக மேற்படி 1 லக்க சொத்தில் 1/2 பங்கு சொத்தினை நான் கிரையம் பெற்றேன்."** என்று முதன்மை சாட்சியம் முன்னிலைப்படுத்தியுள்ளார்.

**1.7.** இந்நிலையில், பி.வா.சா.2 என்பவரை வாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை மேற்கொண்டபோது," **எனது தகப்பனார், குப்புச்சாமி என்பவரிடமிருந்து, பெருமாள் சொத்தினை கிரையம் பெற்றார் என்றால் ? ஆமாம். மேற்படி சொத்தினை எனது சகோதரரிடமிருந்து நான் கிரையம் பெற்றேன் என்றால் ? சரிதான்."** என்று சாட்சியம் முன்னிலைப்படுத்தியுள்ளார். மேற்கண்ட சாட்சியத்தின் தன்மைப்படி, கன்னியப்பன் என்பவரின் தகப்பனார், அதாவது, 1ம் பிரதிவாதியின் தகப்பன் வழி பாட்டனார் பெருமாள் என்பவர் ஒரு குப்புச்சாமி என்பவரிடம் இருந்து சொத்தினை கிரையம் பெற்றுள்ளார் என்பதை அறிய முடிகிறது. எனவே, பெருமாள் என்பவர் கிரையம் பெற்ற சொத்தினை அவர் அனுபவித்து வந்து, அவரது மகன்களான 1ம் பிரதிவாதியின் தகப்பனார் கன்னியப்பன் மற்றும் கன்னியப்பனின் சகோதரரான முருகேசன் ஆகியோர்கள் அனுபவித்து வந்து, முருகேசன் என்பவரிடம் இருந்து

1ம் பிரதிவாதியின் தகப்பனாரான கன்னியப்பன் என்பவர் கடந்த 10.09.2008ம் தேதி சத்திரப்பட்டி சார்பதிவளர் அலுவலக ஆவண எண்.1372/2008 நம்பராக பதிவு செய்யப்பட்ட பாகப்பாத்திய விடுதலைப்பத்திரம் மூலம் சரிபாதி சொத்தினை அடைந்தும், தனது தகப்பனாருக்கு பாத்தியப்பட்ட சொத்தில் தனக்குள்ள சரிபாதி பாகத்தையும் சேர்த்து அனுபவித்து வந்துள்ளார் என்பது மிகத்தெளிவாகிறது. பி.வா.சா.2 என்பவரை வாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை மேற்கொண்டபோது, கன்னியப்பன் என்பவரின் தகப்பனாரான பெருமாள் என்பவருக்கு கடந்த 16.04.1986ம் தேதியிட்ட கிரைய ஆவணத்தின் வழியாக பாத்தியப்பட்ட சொத்துக்கள் என்பது வாதிகள் தரப்பில் ஒப்புக்கொண்டு, வினா எழுப்பப்பட்டுள்ளதில் இருந்து, தாவா 1 லக்க சொத்துக்கள் 1ம் பிரதிவாதியின் தகப்பன் வழி பாட்டனாரான பெருமாள் என்பவர் கடந்த 16.04.1986ம் தேதி தனித்து கிரையம் பெற்ற சொத்துக்கள் (Self acquired property) என்பது மிகத்தெளிவாகிறது.

**1.8.** பெருமாள் என்பவரிடம் இருந்து அவரது வாரிசுகளுக்கு சொத்துக்கள் சென்றடைந்துள்ள நிலையில், கன்னியப்பன் என்பவருக்கு அவரது தகப்பனாரான பெருமாள் என்பவரிடம் இருந்து வந்த சொத்தானது தனிப்பட்ட சொத்தாக (Separate property) வந்தடைந்துள்ளது. இந்நிலையில், கன்னியப்பன் என்பவர் 10.09.2008ம் தேதியில் சொத்தினை பாகப்பாத்திய விடுதலைப்பத்திரத்தின் வழியாக பெற்றுள்ள நிலையில், தாவா 1 லக்க சொத்துக்கள் முழுவதும் 1ம் பிரதிவாதியின் தகப்பனாரான கன்னியப்பன் என்பவரின் (Separate Property) தனிப்பட்ட சொத்தாகும்.

**1.9.** கன்னியப்பன் என்பவருக்கு சொத்துக்கள் தனித்த சொத்துக்களாக உள்ள நிலையில், அவரது விருப்பம்போல் அவர் சொத்துக்களை பராதீனம் செய்ய உரிமை உள்ளது. இந்நிலையில், தனது மகளான குங்குமம் என்பவருடன் சேர்ந்து சொத்தினை தனது மகனான 1ம் பிரதிவாதிக்கு வா.சா.ஆ.1 ஆவணத்தின் வழியாக சொத்துக்களை உரிமை மாற்றம் செய்துள்ளார். கன்னியப்பன் மகனான 1ம் பிரதிவாதி பொன்ராஜ் மற்றும் மகளான குங்குமம் ஆகியோர்களுக்கு சொத்தில் ஏற்கனவே எந்த உரிமையும் (Pre–existing right) இல்லாத நிலையில், தகப்பனாரான கன்னியப்பன் என்பவருக்கு பாத்தியப்பட்ட தனிப்பட்ட சொத்தினை பொறுத்து குங்குமம் என்பவருக்கும் பங்கு

பாத்தியம் உள்ளதாக கருத்தில் கொண்டு கன்னியப்பன் என்பவரின் தனிப்பட்ட சொத்தை உரிமை மாற்றம் செய்த போது பாகப்பாத்திய விடுதலைப்பத்திரம் என்ற பத்திரத்தின் வழியாக உரிமை மாற்றம் ஏற்படுத்தப்பட்டுள்ளது. எது எப்படி இருப்பினும் கன்னியப்பன் மற்றும் அவரது மகளான குங்குமம் ஆகியோர்கள் சேர்ந்து ஒரு தொகையினை பெற்றுக்கொண்டு சொத்துக்களின் உரிமை முழுவதையும் தனது மகனான 1ம் பிரதிவாதிக்கு பாகப்பாத்திய விடுதலைப்பத்திரம் ஏற்படுத்தி வைத்துள்ளார்கள். தாவா 1 லக்க சொத்தில் 1ம் பிரதிவாதிக்கு ஏற்கனவே எந்த உரிமையும் (Pre–existing right) இல்லாத நிலையில், அவரது குழந்தைகளான இந்த வாதிகளுக்கும் தாவா 1 லக்க சொத்தில் எந்த உரிமையும் இல்லை என்பது சட்ட நிலைப்பாடாகும். தாவா 1 லக்க சொத்தினை அவரது தகப்பனார் வா.சா.ஆ.1 ஆவணத்தின் வழியாக சொத்தினை 1ம் பிரதிவாதிக்கு மாற்றம் செய்த காரணத்தினால் மட்டுமே 1ம் பிரதிவாதிக்கு உரிமை பாத்தியம் ஏற்பட்டுள்ளது. எனவே, தாவா சொத்துக்கள் 1ம் பிரதிவாதியின் தகப்பனாருக்கு பாத்தியப்பட்ட பூர்வீக சொத்துக்கள் என்று வாதிகள் கூறியுள்ளது ஏற்புடையதாக இல்லை என்றே இந்நீதிமன்றம் தீர்மானிக்கின்றது.

**2. எழுவினா 2க்கான தீர்வு : அசல் வழக்கானது உரிய தரப்பினர்களை சேர்க்காத காரணத்தினால் பாதிக்கப்படுகிறதா?**

அசல் வழக்கானது பாகப்பிரிவினை பரிகாரம் கோரியுள்ள நிலையில், தாவா வழக்குரை சொத்து விபரத்தில் இரண்டு அட்டவணை சொத்துக்கள் வாதிகளால் குறிப்பிடப்பட்டுள்ளது. இதில், தாவா 1 லக்க சொத்தை பொறுத்து 1ம் பிரதிவாதியின் தகப்பனார் கன்னியப்பன் என்பவருக்கு பாத்தியப்பட்ட தனிப்பட்ட சொத்து என்று மேலே கண்ட எழுவினாவில் தீர்மானிக்கப்பட்டுள்ள நிலையில், தாவா 2 லக்க சொத்தானது எதனடிப்படையில் தரப்பினர்களுக்கு உரிமை பாத்தியம் ஏற்பட்டுள்ளது என்று பரிசீலனை செய்து பார்க்கும்போது, 1ம்பிரதிவாதி தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரையில், பெருமாள் குடும்பன் என்பவருக்கு பாத்தியப்பட்ட சொத்து என்றும், பெருமாள் குடும்பனுக்கு கன்னியப்பன், முருகேசன் என்ற வாரிசுகள் இருந்து வருவதாகவும், நாளது வரை தாவா 2 லக்க சொத்தை பொறுத்து பாகப்பிரிவினை எதுவும்

ஏற்படவில்லை என்றும் எதிர்வழக்குரையில் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்நிலையில், தாவா 2 லக்க சொத்து நத்தம் சர்வே எண்ணில் உள்ள சொத்தாகவும், அதன் கதவு எண்.113 என்றும் வழக்குரை சங்கதிகளில் குறிப்பிடப்பட்டுள்ளது. வாதிகள் தரப்பில் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ.8 மற்றும் வா.சா.ஆ.9 ஆவணங்களை பரிசீலனை செய்து பார்க்கும்போது, வா.சா.ஆ.8வது ஆவணம் சொத்து வரி செலுத்திய ரசீதாகும். வா.சா.ஆ.9ஆவணம் 1ம் பிரதிவாதி பெயரில் மின் கட்டணம் செலுத்திய ரசீதாகும். வா.சா.ஆ.8 சொத்து வரி ரசீதினை இந்நீதிமன்றம் பரிசீலனை செய்து பார்க்கும்போது, 24.01.2014ம் தேதி கதவு இலக்கம் எண்.4-3-113 வரி விதிப்பு எண்.1440 என்றும், பெயர் என்ற இடத்தில் பெருமாள் குடும்பன் என்றும், விலாசம் பழைய ஆயக்குடி என்றும் சொத்து வரி ரசீதில் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்நிலையில், தாவா 2 லக்க சொத்தின் கதவு எண்.113 என்ற உள்ள நிலையில், வாதிகள் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ.8 ஆவணமும் கதவு எண்.113 என்ற எண் கொண்ட வீட்டிற்கு சொத்து வரி செலுத்திய ரசீதாகும். மேற்படி ரசீதில் பெருமாள் குடும்பன் என்ற பெயர் உள்ள நிலையில் சொத்தானது 1ம் பிரதிவாதியின் தகப்பன் வழி பாட்டனாரான பெருமாள் குடும்பன் என்பவருக்கு பாத்தியப்பட்ட சொத்து என்பது மிகத்தெளிவாகிறது. 1ம் பிரதிவாதி தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரை சங்கதிகளில் நாளது வரை தாவா 2 வது இலக்க சொத்தை பொறுத்து பாகம் ஏற்படாமல் உள்ளதாகவும், எனவே, பெருமாள் குடும்பனின் அனைத்து வாரிசுகளையும் தரப்பினர்களாக இவ்வழக்கில் சேர்க்கவில்லை என்றும் எதிர்வழக்குரை குறிப்பிட்டு தாக்கல் செய்துள்ள நிலையில், இவ்வழக்கினை வாதிகள் பாகப்பிரிவினை பரிகாரம் கோரியுள்ள நிலையில், தாவா சொத்திற்கு சம்பந்தப்பட்ட அனைத்து தரப்பினர்களையும் வழக்கில் அவசியதரப்பினர்களாக சேர்த்தால் மட்டுமே சொத்தினை சரியான முறையில் பாகம் பிரிக்க இயலும். தாவா 2வது இலக்க சொத்து 1ம் பிரதிவாதியின் தகப்பன் வழி பாட்டனாரான பெருமாள் குடும்பன் என்பவருக்கு பாத்தியம் ஏற்பட்டுள்ள நிலையில், பெருமாள் குடும்பன் என்பவரின் அனைத்து வாரிசுகளையும் தரப்பினர்களாக சேர்க்காத காரணத்தினால் அசல் வழக்கானது உரிய தரப்பினர்களை சேர்க்கவில்லை என்ற பாதிப்பிற்குள்ளாகிறது என்று இந்நீதிமன்றம் தீர்மானிக்கின்றது.

**3. எழுவினா 4க்கான தீர்வு : தாவா சொத்துக்களை பொறுத்து 2, 3 வாதிகளுக்கு தலா 1/3 பாகம் கிடைக்கத்தக்கதா?**

தாவா சொத்துக்கள் பூர்வீக சொத்துக்கள் என்றும், தங்களுக்கும் தாவா சொத்துக்களில் பங்கு பாத்தியம் உள்ளதாக பரிகாரம் கோரியுள்ள நிலையில், தாவா சொத்துக்கள் பூர்வீக சொத்துக்கள் என்று நிரூபிக்க வேண்டிய பொறுப்பு வாதிகளை சார்ந்ததாகும். பி.வா.சா.2 என்பவர் அளித்த சாட்சியத்தின் தன்மைப்படியும், பி.வா.சா.2 என்பவரை வாதிகள் தரப்பில் மேற்கொண்ட குறுக்குவிசாரணையின் தன்மைப்படியும், தாவா 1 லக்க சொத்து பெருமாள் என்பவர் கடந்த 16.04.1986ம்தேதியிட்ட கிரைய ஆவணத்தின் தன்மைப்படி கிரைய பெற்றுள்ளதால் தாவா 1 லக்க சொத்து 1ம் பிரதிவாதியான கன்னியப்பன் என்பவருக்கு பாத்தியப்பட்ட தனிப்பட்ட சொத்தாகும். வாதிகள் தாவா 1 லக்க சொத்தை பொறுத்து பூர்வீக சொத்துக்கள் என்று ஒருநிலைப்பாட்டை எடுக்க இயலாது. தாவா 2 லக்க சொத்தும், பெருமாள் குடும்பன் என்பவருக்கு பாத்தியப்பட்டிருந்ததாக வாதிகளே வா.சா.ஆ.8 வீட்டு வரி ரசீதுதாக்கல் செய்துள்ள நிலையில், பெருமாள் குடும்பனின் அனைத்து வாரிசுகளையும் வழக்கில் தரப்பினர்களாக சேர்க்காத நிலையில், தாவா சொத்துக்களை பொறுத்து வாதிகள் கோரக்கூடிய பாகப்பிரிவினை பரிகாரம் வாதிகளுக்கு கிடைக்கத்தக்கதல்ல என்றே இந்நீதிமன்றம் தீர்மானிக்கின்றது.

**4. எழுவினா 5க்கான தீர்வு: வாதிகள் கோரியுள்ள நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் வாதிகளுக்கு கிடைக்கத்தக்கதா?**

தாவா 1வது லக்க சொத்தினை பொறுத்து மேலே கண்ட எழுவினாக்களில் 1ம் பிரதிவாதியின் தகப்பனாருக்கு தனிப்பட்ட சொத்தாக பாத்தியம் ஏற்பட்டு,பின்பு 1ம்பிரதிவாதிக்கு சொத்தின் உரிமை மாற்றம் ஏற்பட்டுள்ள நிலையில், தாவா 1 லக்க சொத்தினை பொறுத்து வாதிகளுக்கு எவ்வித பங்கு பாத்தியமும் இல்லாத நிலையில், தாவா 1 லக்க சொத்தை பொறுத்து வாதிகள்கோரக்கூடிய நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் வழங்க இயலாது. மேலும், தாவா 2 லக்க சொத்தானது பெருமாள் குடும்பன் என்பவருக்கு பாத்தியப்பட்டுள்ள நிலையில், அனைத்து வாரிசுகளையும் சேர்த்து வழக்கு தாக்கல் செய்யாத நிலையில், தாவா 2 லக்க சொத்து பெருமாள் குடும்பன் என்பவரின்

தனிப்பட்ட சொத்தா அல்லது சொத்தானது பெருமாள் குடும்பனுக்கு எவ்வாறு வந்தடைந்தது என்பது பற்றி எந்த ஒரு ஆவணமும் வாதிகள் தரப்பில் தாக்கல் செய்யாத நிலையிலும், வாதிகள் கோரியுள்ள பாகப்பிரிவினை பரிகாரத்தை பொறுத்து கிடைக்கத்தக்தல்ல என்று மேலே கண்ட எழுவினாவில் தீர்மானித்துள்ள நிலையில், தாவா 2 லக்க சொத்தை பொறுத்து வாதிகள் கோரக்கூடிய நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் வழங்குவது நீதியின் நலனுக்கு உகந்ததாக இருக்காது என்று இந்நீதிமன்றம் தீர்மானிக்கின்றது.

**5. எழுவினா 6க்கான தீர்வு : வாதிகளுக்கு கிடைக்கக்கூடிய இதர பரிகாரம் என்ன?**

வாதிகள் கோரியுள்ள பாகப்பிரிவினை பரிகாரம் மற்றும் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் வாதிகளுக்கு கிடைக்கத்தக்கதல்ல என்று மேலே கண்ட எழுவினாக்களில் தீர்மானித்துள்ள நிலையில், வாதிகளுக்கு இதர பரிகாரங்கள் எதுவும் வழங்க வேண்டியதில்லை என்று இந்நீதிமன்றம் தீர்மானிக்கின்றது. வழக்கின் தன்மையை கருத்தில் கொண்டும், தரப்பினர்களின் உறவுமுறைகளை கருத்தில் கொண்டும் செலவு தொகை பற்றிய உத்தரவு ஏதும் பிறப்பிக்கவில்லை.

**11. முடிவில்,**

**தாவா சொத்துக்களை பொறுத்து வாதிகள் கோரியுள்ள பாகப்பிரிவினை பரிகாரம், நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் வாதிகளுக்கு கிடைக்கத்தக்கதல்ல என்று வாதிகளின் வழக்கு செலவு தொகையின்றி தள்ளுபடி செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது.**

இந்த தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை திருத்தம் செய்யப்பட்டு, 2026 ஆம் ஆண்டு ஜுன் மாதம் 24ஆம் நாள் அவையறிய திறந்த நீதிமன்றத்தில் தீர்ப்புரை பகரப்பட்டது.

C JAYAPPRAKASH
Digitally signed by C JAYAPPRAKASH
Date: 2026.06.24 10:51:38 +0530

**சார்பு நீதிபதி,**
**ஒட்டன்சத்திரம்**

**வாதிகள் தரப்பு சாட்சிகள் :**

| | | | | |
|---|---|---|---|---|
| வா.சா.1 | – | ஹேமலதா | – | 3ம் வாதி |
| வா.சா.2 | – | S.அமுதா | – | 3ம் நபர் |

**வாதிகள் தரப்பு சான்றாவணங்கள் :**

| | | | |
|---|---|---|---|
| 1 | 24.09.2008 | தாவா சொத்துக்களை பொறுத்து 1ம் பிரதிவாதிக்கு அவரது தந்தை மற்றும் சகோதரி ஆகியோர்கள் எழுதி வைத்த பாகப்பாத்திய விடுதலைப்பத்திரம் – சார்பதிவாளர் அலுவலக நகல் | வா.சா.ஆ.1 |
| 2. | 23.01.2014 | தாவா சொத்துக்களுக்கு 1ம் பிரதிவாதி மற்றும் குப்புச்சாமி கவுண்டர் பெயரில் உள்ள பட்டா எண்.548 என்ற எண்ணுக்கான பட்டா – உண்மை நகல் | வா.சா.ஆ.2 |
| 3. | 23.01.2014 | தாவா சொத்துக்களுக்கு 1ம்பிரதிவாதி பெயரில் உள்ள பட்டா எண்.732 என்ற எண்ணுக்கான பட்டா – உண்மை நகல் | வா.சா.ஆ.3 |
| 4. | 23.01.2014 | தாவா சொத்துக்களுக்கான அ பதிவேடு – உண்மை நகல் | வா.சா.ஆ.4 |
| 5. | 19.01.2014 | தாவா சொத்துக்களுக்கான அ பதிவேடு – உண்மை நகல் | வா.சா.ஆ.5 |
| 6. | 19.01.2014 | வாதி பழனி நகர் அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் 1ம் பிரதிவாதி மீது கொடுத்த புகாருக்கு காவல்நிலையத்தில் வழங்கிய புகார் மனு ஏற்பு ரசீது – அசல் | வா.சா.ஆ.6 |
| 7. | 20.01.2014 | வில்லங்க பதிவினை நிறுத்தி வைக்கக்கோரி வாதி சத்திரப்பட்டி சார்பதிவாளர் அலுவலகத்தில் கொடுத்த ஆட்சேபனை மனு – அலுவலக நகல் | வா.சா.ஆ.7 |
| 8. | 24.01.2014 | பெருமாள் குடும்பன் பெயரில் உள்ள வீட்டு வரி ரசீது – அசல் | வா.சா.ஆ.8 |
| 9. | 24.12.2013 | 1ம் பிரதிவாதி பெயரில் உள்ள மின் கட்டண ரசீது – அசல் | வா.சா.ஆ.9 |

**பிரதிவாதிகள் தரப்பு சாட்சி :**

பி.வா.சா.1 – பொன்ராஜ் – 1ம் பிரதிவாதி

பி.வா.சா.2 – கன்னியப்பன் – 1ம் பிரதிவாதியின் தகப்பனார்

**பிரதிவாதிகள் தரப்பு சான்றாவணங்கள்** – இல்லை

**சாட்சிய சான்றாவணங்கள் :**

| | | | |
|---|---|---|---|
| 1 | – | பொன்ராஜ் பெயரில் உள்ள UCO வங்கியின் கடன் அட்டை மற்றும் வங்கி மேலாளரின் கடிதம் – சான்றொப்பமிடப்பட்டது. | சா.சா.ஆ.1 |
| 2. | 11.07.2025 | பழனி தொடக்க கூட்டுறவு வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கியின் கடிதம் – அசல் | சா.சா.ஆ.2 |

C JAYAPPRAKASH
Digitally signed by C JAYAPPRAKASH
Date: 2026.06.24 10:51:44 +0530

**சார்பு நீதிபதி,**
**ஒட்டன்சத்திரம்**